**இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுகள் ஊடாக 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் (இ.க.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு நியமத்தின் கீழான எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால்

அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி பல்கலைக்கழகம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய நியமத்துடனான தொடர்புடனான இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் கழிவுப் பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் ஆகியன வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிராத காரணத்தினால் ரூபா 194,197,449 கிரயமான வாசிகசாலை புத்தகங்கள் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தது. அதற்கமைய ஏற்பட்ட மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் நியமத்தின் 92 ஆம் பந்தியின் பிரகாரம் இவ்வாறானதொரு சொத்து தொடர்பில் வெளிப்படுத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | புத்தகங்களின் பெறுமதியை கணிப்பீடு செய்யும் பணிகள் தற்போது இடம்பெறுவதுடன் இந்த ஆண்டின் போது அப்பணிகளை நிறைவு செய்து 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றமை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வெண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கற்கை உருப்படிகள் (Course Materials) இறுதி இருப்பின் கிரயம் ரூபா 1,480,000 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அதனை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டின் இறுதியில் உள்ளபடியான பௌதீக இறுதி இருப்பினை சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 மார்ச் மாதத்தில் சனாதிபதி செயலகத்திலிருந்து கிடைக்கப் பெற்றிருந்த 02 மோட்டார் வாகனங்களின் ரூபா 6,500,000 ஆன மதிப்பீட்டு பெறுமதியினை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு பெறுமதி சொத்து கிடைக்கும் சந்தர்ப்பத்தில் கணிப்பிடப்படாத காரணத்தினால் அந்த வாகனம் 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த முடியாதிருந்தது. எனினும் தற்போது அந்த சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளமையால் 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அதனை சரியாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதிகளாக கிடைக்கும் சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 07 நிலையான வைப்புக்களுக்குரியதாக மீளாய்விற்காக பெற வேண்டிய ரூபா 1,322,959 ஆன வட்டி வருமானம் கணக்கு வைக்கப்பட்டிராத காரணத்தினால் அதற்கு சமமான பெறுமதியினால் ஆண்டின் மிகை மற்றும் பெறவேண்டிய வட்டி வருமானம் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டியை சரியாக கணிப்பிட்டு கணக்கு வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரியதாக பெறவேண்டிய மாணவர் வருமானத்தை சரியாக இனங்காணாது மாணவர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி மற்றும் இனங்காணப்படாத மாணவர் வருமானக் கணக்கில் மீதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 442,108,770 ஆன வேறுபாடு பெறவேண்டிய மாணவர் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த பெறவேண்டிய மாணவர் வருமானத்திற்கும் இனங்காணப்படாத மாணவர் வருமானத்திற்கும் உரிய காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | OMIS கணனி கட்டமைப்பில் நிலவும் குறைபாடுகள் காரணமாக மாணவர் வருமானத்திற்குரிய சரியான காலப்பகுப்பாய்வினை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. புதிய கணனி கட்டமைப்பின் மூலம் அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எதிர்காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. | பெறவேண்டிய மாணவர் வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கும் அதற்குரிய காலப் பகுப்பாய்வினை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், பற்றுச்சீட்டுக்கள், பேரேட்டு உறுதிச்சீட்டுக்கள் போன்ற மூல ஆவணங்களை தயாரிக்காது பெறுமானத்தேய்வு, பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மற்றும் சொத்துக்கள் கணக்குகளுக்கு கணனி கட்டமைப்பின் மூலம் பதிவு செய்தல் இடம்பெற்றிருந்தது. இவ்வாறான பதிவுகளினுள் தவறான பதிவுகளை திருத்துவதற்காக ஆண்டின் இறுதியில் பேரேட்டு பதிவுகளை பயன்படுத்தி பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்க கணக்குகளிலிருந்து ரூபா 335,896,468 ஆன தொகை அகற்றப்பட்டிருந்தது. அவ்வாறே கூடுதலாக அறவிடப்பட்டிருந்த பிடிகாசு | OMIS கணனி கட்டமைப்பின் மூலம் பெறுமானத்தேய்வுக் கணிப்பீடானது சரியாக இடம்பெறுவதில்லை.<br><br>அதற்கமைய கணனி கட்டமைப்பின் மூலம் வழங்கப்படும் பெறுமானத்தேய்வு கணிப்பீடுகள் பதிவுகளின் மூலம் அகற்றப்பட்டு சரியாக கணிப்பிடப்பட்ட வருடாந்த பெறுமானத்தேய்வின் பெறுமதி பேரேட்டுக் கணக்கின் ஊடாக கணனிக் கட்டமைப்பில் உள்ளடக்கப்படுகின்றது. | கணனி மென்பொருளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,198,818 இனை திருத்தும் சீராக்கல் பதிவிற்காக பேரேட்டு பதிவொன்று பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஊ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 4,847,854 கிரயமான கட்புலச் சொத்துக்களை அவை கொள்வனவு செய்த திகதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காலக்கழிவுக்கு உள்ளாக்கப்பட்டிருக்க வில்லை. | ரூபா 5,340,344.00 தொகையான E-book மற்றும் மென்பொருள் (Software) ஆகியவற்றின் ஆயுட்காலத்தை எதிர்வுகூற முடியாமையால் அச்சொத்துக்களை நிச்சயமற்ற ஆயுட்காலமுள்ள கட்புலச் சொத்துக்களாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய SLPSAS 20 இன் பிரகாரம் அச்சொத்துக்கள் காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கட்புலச் சொத்துக்களின் ஆயுட்காலத்தை இனங்கண்டு காலக்கழிவிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | யாழ்ப்பாண பிரதேச மத்திய நிலையங்களில் ரூபா 186,010,726 கிரயமான ஏழு மாடிகளைக் கொண்ட கட்டிடத்தின் பணிகள் 2021 மார்ச் 15 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி மூலதனமாக்கப்பட்ட காரணத்தினால் அக்காலப்பகுதிக்குரியதாக ரூபா 6,599,559 ஆன பெறுமானத்தேய்வு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்தொன்றினை பயன்பாட்டிற்கு உகந்த நிலைக்கு உள்ளான நாள் தொடக்கம் பெறுமானத்தேய்வு கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) நிதிப்பிரமாணம் 102, 103, 104 மற்றும் 2016 பெப்ரவரி 12 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (i) திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது பல்கலைக்கழக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 25,046,765 கூட்டுத்தொகையான சேதமடைந்த கற்கை உருப்படிகள் (Course Materials) புத்தகங்களிடமிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இது தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | (i) கல்வியாண்டுகளுக் கிடையில் மாணவர்கள் பாடநெறிகளை கைவிடுதல், பாடவிதானத்தில் மாற்றங்கள் ஏற்படுதல் போன்ற விடயங்களின் அடிப்படையில் சில சந்தர்ப்பங்களில் அச்சிடப்பட்ட புத்தகங்களை அகற்றுவதற்கு நேரும். இந்த இணையவழி கல்வியினை வழங்கும் பல்கலைக்கழக மொன்றில் ஏற்படக் கூடிய பொதுவான நிலைமையாகும். இதற்கமைய அச்சிடப்பட்ட புத்தகங்களை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதை இருப்பு நட்டமாக குறிப்பிட முடியாது. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் பேண வேண்டிய இருப்பு மட்டத்தினை தீர்மானித்து அதற்கமைய கட்டளைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து அரசிற்கு ஏற்படும் நட்டத்தினை குறைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) 2018 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வுச் சபையின் அறிக்கையின் பிரகாரம் நிலவிய | (ii) மொழிக்கற்கைகள் பிரிவு மற்றும் பரீட்சைகள் பிரிவிற்குரிய | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேறுபாடுகள் தொடர்பில் ஆரம்ப விசாரணைகளை மேற்கொள்வதற்காக உபவேந்தரினால் 2020 ஆகஸ்ட் 06 ஆந் திகதி ஆரம்ப விசாரணை சபைகள் இரண்டு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் விசாரணை பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்க வில்லை. | ஆரம்ப விசாரணை அறிக்கைகளில் உள்ள பரிந்துரைகளின் பிரகாரம் தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br><br>மேலும், தகவல் தொழில்நுட்ப பிரிவிற்குரிய ஆரம்ப விசாரணை அறிக்கையில் சிற்சில குறைபாடுகள் காணப்படுவதுடன் அதனை தொடர்ந்தும் தெளிவுபடுத்துவத ற்காக விசாரணை சபையின் தலைவருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள து. அது கிடைத்தவுடன் உரிய பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 113(3)(அ) | மீளாய்வாண்டில் பதிவினை புதுப்பிக்காத 05 வருடங்களை கடந்த மாணவர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 43,729,298 தொகையான மாணவர் வருமானங்கள் திறைசேரி அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்குரிய கட்டுப்பாட்டுச் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் பாடநெறிகளை கைவிட்டுச் சென்ற மாணவர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 48,729,298.00 ஆன தொகையை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 1645(ஆ), (இ) | பல்கலைக்கழகத்தின் 12 வாகனங்களுக்குரிய 2021 | ஏற்றுக்கொள்கின்றேன். உரிய திருத்தங்களை | நிதிப் பிரமாணத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் நிதிப்பிரமாணம் 1646 | சனவரி முதல் 2022 பெப்ரவரி வரையான காலப்பகுதியினுள் எரிபொருள் சமப்படுத்த வேண்டிய விகிதத்தின் அடிப்படையில் 2,728 லீற்றர் எரிபொருள் கூடுதலாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே 05 வாகனங்களுக்குரிய ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட கிலோமீற்றரின் எண்ணிக்கை நாளாந்த ஓட்டக் குறிப்புக்களில் குறிப்பிடாது ரூபா 232,687 தொகையான 1,850 லீற்றர் டீசல் மற்றும் 127 லீற்றர் பெற்றோல் பயன்படுத்தப்பட்டிருந்தது. | மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 1647(ஆ) | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 110,736,110 கிரயமான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் வருடாந்த மெய்மையாய்வு இடம்பெற்றிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். எவ்வாறான போதிலும் இதன் பின்னர் பொருள் மெய்மையாய்வுச் சபையினை நியமித்து வாகனங்கள் மற்றும் வாகனங்களுக்கு சொந்தமான உபகரணங்களின் மதிப்பீட்டிற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங் களுக்கான தாபன விதிக் கோவையில் V ஆம் அத்தியாயத்தின் 7.6 ஆம் பிரிவு | 1989 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலஎல்லையினுள் பிணை முறி உடன்படிக்கையை மீறிய 11 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 19,884,652 கூட்டுத்தொகை உடன்படிக்கை மீறப்பட்ட திகதியிலிருந்து மற்றும் 09 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 9,817,731 கூட்டுத்தொகை 2017 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியான 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | இந்த உத்தியோகத்தர் களிடையே பிணை முறியை பேணி 10 வருடங்களை விஞ்சிய உத்தியோகத்தர்களின் நலன்புரி நிதிய மீதியில் அவர்களின் விருப்பம் மற்றும் வெளிப்படுத்தும் கடிதம் இல்லாது அறவிடுவதற்கு அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு கடிதமொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.<br><br>இருவரிடமிருந்து | பிணைமுறிகள் மற்றும் உடன்படிக்கை மீறிய காரணத்தினால் அரசிற்கு அறவிட வேண்டிய தொகையை துரிதமாக அறவிட்டு பல்கலைக் கழகத்தின் நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அறவிடப்பட வேண்டிய தொகை நலன்புரி நிதியத்திலிருந்து அறவிடுவதற்கும் இருவருக்கு வழக்குத் தொடருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே காலம் கடந்துள்ள பிணைமுறி மீறல் தொடர்பில் ஆராய்வதற்கு குழுவொன்று நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரியின் சுற்றறிக்கை | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 14,266,095,834 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் ரூபா 16,167,163 கிரயமான கட்புலச் சொத்துக்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | கணக்காய்வினால் கோரப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேடு நிதிக்கூற்றுக்களின் கணக்குகளுக்கு உரிய பட்டோலைகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | திறைசேரி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பராமரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவன-ங்களுக்கான தாபன விதிக் கோவையில் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆந் திகதிய 10/2017 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | கல்விசார் பதவியணியின் 348 உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லுகைகளை சான்றுபடுத்தாது மீளாய்வாண்டிற்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,317,557,428 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | தாபன விதிக்கோவையினதும் அரச நிர்வாக சுற்றறிக்கையினதும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கல்விசார் பதவியணியின் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவு செய்யப்படவில்லை. | தாபன விதிக் கோவை மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி மற்றும் 2019 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 06/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் போட்டி அடிப்படையிலான விலைக்கேள்வி கோரப்பட்டு வாகனங்களுக்கான காப்புறுதி மேற்கொள்வதற்கு வருடாந்தம் நடவடிக்கை எடுக்காது கூறுவிலை கோரப்படாது 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 8,149,311 செலுத்துவதற்கு தொடர்ச்சியாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் காப்பீடு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் 2018 ஆம் ஆண்டு முதல் விபத்துக்குள்ளாகியிருந்த 5 வாகனங்களுக்குரிய பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொண்டு காப்புறுதி நட்டஈட்டினை பெற்றுக்கொள்வதற்கு 2022 பெப்ரவரி 21 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டது. | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 06/2019 இன் அரச நிதிச் சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தப்பட்ட 2019/08/19 ஆந் திகதி முதல் என்பதால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் காப்புறுதி சேவைகளை பெற்றுக் கொள்ளும் போது பதிவு செய்த காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டு பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்துடன் பீப்பிள்ஸ் இன்சுரன்ஸ் கம்பனிக்கு காப்புறுதி சேவை வழங்குவதற்கு உரிய ஒப்பந்தம் கையளிக்கப்பட்டது. இதன் போது பல்கலைக்கழக சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்தினால் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் வருடாந்தம் நாளதுவரையாக்கப்பட்ட திட்டங்களின் பிரதிகளும் பொது திறைசேரிக்கு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உரிய பிரிவுகளுக்கு அனுப்பப்படும். | எதிர்வரும் வருடத்தில் நிறைவேற்று வதற்கு எதிர்பார்த்த பணியை நம்பிக்கை பொறுப்பிற்கு உரிய செயல் நடவடிக்கைத் திட்டம் (Activity Plan) தயாரிக்கப்படல் வேண்டும். |
| (எ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 | நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் | திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்கும் | சுற்றறிக்கையின் பிரகாரம் முன் |

| | | | |
|---|---|---|---|
| ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைளின் 8.2.2 ஆம் பிரிவு | முன்அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 251,886,511 மற்றும் மீளாய்வாண்டினுள் ரூபா 261,383,503 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | வரையில் குறுங்கால முதலீடுகளை மேற்கொள்ள முடியாமையால் திறைசேரியின் உத்தியோகத்தர்களின் அறிவுரைக்கமைய நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யும் சந்தர்ப்பத்தில் திறைசேரியின் அங்கீகாரத்தினை கோரி கடிதமொன்று திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. | அங்கீகாரத் தினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 103,989,560 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 531,516,776 ஆகும். அதற்கமைய நிதிப் பெறுபேறுகளில் ரூபா 635,506,336 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரச மானியங்கள், மாணவர் வருமானம் மற்றும் குறுங்கால பாடநெறி வருமானம் ஆகியன அதிகரித்தமை பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் 05 பிரிவுகளின் விடயங்கள் தொடர்பில் 05 மொடியூல்களாக தாபிக்கப்பட்டிருந்த செயற்பாட்டு முகாமைத்துவ தகவல் கட்டமைப்பின் (OMIS) நிலவும் குறைபாடுகள் உரிய பராமரிப்புக் கம்பனியிடமிருந்து விடுவிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாதிருந்தது. அதனால் நிலவும் தகவல் கட்டமைப்பினை விட செயற்திறனானதும் பல்கலைக்கழகத்தின் | ஒரு தகவல் கட்டமைப்பை நிறுவுவது குறுகிய காலத்தில் எளிதாக செய்துவிட முடியாது. பல்கலைக்கழகம் புதிய தகவல் கட்டமைப்பை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த பணிகள் இன்னும் நடந்து வருகின்றன. | தற்போதுள்ள கணினியின் குறைபாடுகள் மீண்டும் ஏற்படாத வகையில் புதிய கணினி முறையை தாமதமின்றி அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

தேவைப்பாடுகளுக்கு பொருத்தமானதுமான தகவல் தொழில்நுட்ப பிரிவின் மூலம் தகவல் கட்டமைப்பொன்றினை உருவாக்குவதற்கு பல்கலைக்கழகம் கவனம் செலுத்தியுள்ளமை தொடர்பில் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த புதிய தகவல் கட்டமைப்பும் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிறுவப்பட்டிருக்கவில்லை.

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் ஒப்பந்த அடிப்படையில் 39 உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசார் பதவியணியின் 179 பேர் ஆட்சேர்க்கப்பட்டு 2021 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் ரூபா 100,614,207 படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | 2020, 2021 ஆகிய இரு வருடங்களிலும் ஒய்வுபெறல், சேவையிலிருந்து இராஜினாமா செய்தல், மரணமடைதல் மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லல் ஆகியவற்றின் காரணமாக பல்வேறு வெற்றிடங்கள் ஏற்பட்டன. அதனால் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தினை பெற்று கல்விசார் பணிகளை உரிய முறையில் நடாத்திச் செல்வதற்கு ஒப்பந்த மற்றும் தற்காலிக அடிப்படையில் கல்விசார் பதவியணி இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்ற வெற்றிடமான பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 வாகனக் கட்டமைப்பின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு வருடம் முதல் 05 வருடங்கள் வரையான காலமாக 03 மோட்டார் வாகனங்கள் | இந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக 10 பதிவு செய்த | ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படும் வாகனங்களுக்கு |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப்படாது பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் வாகன தரிப்பிடத்தில் மற்றும் அதற்கு வெளியே பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அக்காலப்பகுதிக்காக வாகனத்தின் முழுமையான காப்புறுதிக்கு ரூபா 235,269 ஆன தொகை விளைவற்ற முறையில் செலவிடப்பட்டிருந்தது. | ஒப்பந்தகாரர்களிடமிருந்து 2021.12.29 ஆந் திகதி கூறுவிலைகள் கோரப்பட்டதுடன் உரிய பெறுகை நடைமுறைக்கமைய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை மற்றும் சிறு பெறுகைக்குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் இரு வாகனங்களின் பழுதுபார்த்தலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. வான் வண்டியின் பழுதுபார்த்தலுக்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது.<br><br>வாகனங்களுக்கான குழும காப்புறுதியொன்று (Insurance for Fleet of Vehicles) என்பதால் மற்றும் இந்த வாகனம் பழுதுபார்க்கப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு இயலுமான வரையில் இந்த வாகனத்தையும் உள்ளடக்கி 34 வாகனங்களுக்காக காப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | மாத்திரம் காப்புறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே பழுதுபார்த்தல் மேற்கொள் வதற்குள்ள வாகனங்களை தாமதமின்றி பழுதுபார்ப்பதற்கு உரிய பணிகளை மேற்கொண்டு ஓட்டத்திற்கு பொருத்தமான நிலைக்கு உள்ளாக்க வேண்டும். |